[1974 ஏப்ரல் 11

Casual Labourers employed in the Cooum Improvement Scheme

* 309 *Q*.—Thiru V. VENGA (on behalf of Thiru KATTOOR GOPAL): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representation has been received from the Casual Labourers employed in the Cooum Improvement Scheme requesting to provide employment opportunities by appointing them in Buckingham Canal Improvement Scheme; and

(*b*) if so, the action taken thereon by the Government?

கூவம் சீரமைப்புத் திட்டத்தில் பணியாற்றி வந்த தற்காலிக தினக்கூலித் தொழிலாளர்கள்

திரு. வி. வெங்கா (திரு. காட்டூர் கோபால் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கூவம் சீரமைப்புத் திட்டத்தில் பணியாற்றி வந்த தற்காலிக தினக் கூலித் தொழிலாளர்களை பக்கிங்ஹாம் கால்வாய் சீரமைப்புத் திட்டப் பணிகளில் அமர்த்தி வேலை வாய்ப்பு அளித்திட வேண்டிக் கொண்டு முறையீடு ஏதும் வரப்பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) கூவம் திட்டத்தில் பணியாற்றி வந்த தற்காலிக தினக்கூலித் தொழிலாளர்கள் எவரும் வேலை நீக்கம் செய்யப்படவில்லை என்று பாசனத் தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார்.

திரு. ஜி. பராங்குசம்: தலைவர் அவர்களே, பொதுவாகப் பொதுப்பணித் துறையிலே பணியாற்றுகின்றவர்கள் தற்காலிக தினக்கூலிகளாக இருப்பது நிர்வாகத்தில் பல ஊழல்கள் நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கிறது. எனவே தற்காலிகம் என்பதை எடுத்துவிட்டு, அவர்கள் அத்தனை பேரையும் நிரந்தரக் கூலிகள் என்று ஆக்குவதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பத்து நாட்களுக்கு ஆட்கள் தேவையென்றால் வைக்கின்றோம். வேலைக்குத் தேவை இல்லையென்றால் நிறுத்திவிடுகின்றோம். மறுபடியும் தேவை ஏற்படுகின்ற போது வைக்கின்றோம், இவர்களை தினக்கூலிகள் என்று சொல்லும்போது,

1974 ஏப்ரல் 11]

சொல்கின்ற வார்த்தை தாழ்வாக இருக்கலாம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறமாதிரி வேறு சொல்கூட வைத்துக்கொள்ளலாம். நிரந்தர ஊழியர்களாக இவர்களை ஆக்கிவிட்டால், அவர்களுக்கு வேலையில்லாத நேரத்திலும் சம்பளம் கொடுக்க வேண்டும். அவர்களை தேவைப்படுகிறபோது வைத்துக்கொள்வதால்தான், என்.எம்.ஆர். என்று சொல்கிறோம்.

திரு. ஜி. பராங்குசம்: தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையில் ஒரு வேலை முடிந்தால், மறு வேலை ஆரம்பிக்கப்படுகிறது. இப்பொழுது கூவம் வேலை முடிந்த பிறகு, பக்கிங்ஹாம் கால்வாய் வேலை ஆரம்பிக்கப்படுகிறது. அல்லது மற்ற வேலை ஆரம்பிக்கப்படுகிறது. எனவே ஒரு வேலை முடிந்தால், அவர்களை மறுவேலைக்கு மாற்றிக்கொள்ளலாம். அவர்களுக்கு நிரந்தரமாக வேலை இருந்துகொண்டுதான் இருக்கிறது. எனவேதான் தற்காலிகக் கூலிகள் என்பதை எடுத்துவிட்டு, நிரந்தரக் கூலிகள் என்று வைத்துவிட்டால், அவர்கள் எந்தவிதமான தொல்லையும் இல்லாமல், பணியாற்ற முடியும். எனவே அதற்கான திட்டம் அரசிடம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அவர்கள் முயற்சியைப் பாராட்டுகிறேன். ஆனால் அரசாங்கத்தின் நிதிநிலை இடம் தராது. ஒரு இடத்திலே வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள், இன்னொரு இடத்திலே வேலையிருந்தால், அவர்களுக்கு முதலிடம் கொடுக்கலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, அவர்களை வேலை நீக்கம் செய்துவிட்டால், மீண்டும் அவர்களையே எடுத்துக்கொள்ளும் வகையில், நிரந்தர தினக்கூலி என்று அவர்களுக்குப் பெயரிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதற்குப் பொருள் எனக்குப் புரியவில்லை. நிரந்தர தினக்கூலி என்றாலும், அவர்கள் வீட்டிற்குப் போகிறபோது வேலையில்லாமல்தான் இருக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நிரந்தர தினக்கூலி என்றால், தினம் தான் நிரந்தரமாகுமே தவிர, வேலை நிரந்தரமாகாது.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, கூவம் சீரமைப்புத் திட்டத்திலே வேலை செய்த நபர்கள் அத்தனை பேரும் இன்றைக்கு பக்கிங்ஹாம் கால்வாய்த் திட்டத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, வேலையிலே யிருந்து எவரும் நீக்கப்படவில்லை என்றுதான் சொன்னேன். எவ்வளவு பேர் என்பதற்குப் புள்ளிவிவரம் என்னிடத்திலே இல்லை.